அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 08/2010(I)

எனது இல : EST-6/05/TPR/5120
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.12.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்

**அரச செலவுகள் முகாமைத்துவம்**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2010.05.24 ஆந் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 08/2010 குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். மேற்படி சுற்றறிக்கையின் பத்தி 02, 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு ஏற்ப பின்வருமாறு திருத்தப்படுகிறது.

02. கௌரவ அமைச்சர்கள், கௌரவ இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் கௌரவ பிரதி அமைச்சர்களின் தனிப்பட்ட பணிக்குழாமினரில் பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு கீழே குறிப்பிடப்படும் அதிகபட்ச அளவுக்கு அமைவாக வழங்கப்படும்.

| **உரிமை பெறும் உத்தியோகத்தர்கள்** | **டீசல் /பெற்றோல் வாகனங்களுக்கான எரிபொருளின் லீற்றர் எண்ணிக்கை** |
|---|---|
| பிரத்தியேக செயலாளர் | 235 |
| ஒருங்கிணைப்புச்செயலாளர்/<br>ஊடகச் செயலாளர்/<br>பொது மக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் | 213 |

03. இந்த திருத்தங்கள் 2022.01.01 முதல் நடைமுறைக்கு வரும் என்பதுடன், பொது நிர்வாக சுற்றறிக்கை 08/2010 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அதே முறையில் நடைமுறையாகும்.

04. இந்த சுற்றறிக்கை திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு